රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. RG/MBD/1/ சுற்றறிக்கை (V2)

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. 565

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2022.09.06


பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம்,

..............................

**பிறப்பு, விவாக மற்றும் மரணச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் செல்லுபடி காலத்தை தீர்மானித்தல்.**

பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் பிறப்பு, விவாக மற்றும் மரணச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் செல்லுபடி காலம் தொடர்பில் சில நிறுவனங்களினால் காலப் பிரிவுகளை நிர்ணயிப்பதால் (உதாரணம் : சான்றிதழ் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் செல்லுபடியாகும்.) உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பெருமளவில் தூண்டப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கிணங்க, பதிவாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகலவிதமான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கு அமைய பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றின் செல்லுபடி காலத்தை எவ்வித வரையறைக்கும் உட்படுத்தாது ஏற்றுக்கொள்ளுமாறு கல்வி அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு தற்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் தங்களது அலுவலகத்திற்கு வருகைத்தரும் சேவைப் பெறுநர்களை அறிவூட்ட தேவையான நடவடிக்கைககளை மேற்கொள்ளல் வேண்டும்.

03. அதற்கமைய, மறுபக்கத்தில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட அறிவித்தலை அல்லது பொருத்தமான அறிவித்தலொன்றை பொதுமக்களுக்கு நன்கு தெரியக்கூடிய வகையில் தங்களது அலுவலகத்தில் காட்சிப்படுத்துமாறும் தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

**பி.எஸ்.பி. அபேவர்தன**

**பதிவாளர் நாயகம்**

பிரதி :

1. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – தயவுகூர்ந்து தகவலுக்காக.


දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. 2889488 2889489
ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. 2889491
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website www.rgd.gov.lk
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail rgd@sltnet.lk rg@rgd.gov.lk

## பொதுமக்களுக்கான விசேட அறிவித்தல்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தி தாங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிறப்பு, விவாக மற்றும் மரணச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றின் செல்லுபடி காலம் 06 மாத காலத்தின் பின்னர் செல்லுபடியற்றதாக கருதப்படமாட்டாது. அது எக்காலத்திற்கும் செல்லுபடியாகும். இது தொடர்பில் கல்வி அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு தற்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தங்களிடம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தெளிவான உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இருப்பின் மீண்டும் புதிய பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது என்பதை இத்தால் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் பிறப்பு, விவாக மற்றும் மரணச் சான்றிதழ்களில் திருத்தங்களை மேற்கொண்டிருப்பின் மாத்திரம் திருத்தப்பட்ட புதிய பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**பதிவாளர் நாயகம்**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**